மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். அது வேண்டாம். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்வது, இந்த முக்கியமான தீர்மானத்தின்போது வேறு எதுவும் தேவையில்லை. ஆகவே, அதை விட்டுவிடலாம். இப்பொழுது தீர்மானத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலோடு, அவருடைய வேண்டுகோளை ஏற்று, இந்தத் தீர்மானத்தை பேரவையின் முடிவிற்கு விடுகிறேன்.

பிற்பகல் 5-35

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

1. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

2018 டிசம்பர் 6] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-36 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS